## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி) – பகுதி I 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

## TL - 202 குறிப்பிட்ட பாட நூல்கள்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
**(எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்)**

---

1. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

குயில் வாய் அன்ன கூர்முகை அதிரல்
பயிலாது அல்கிய பல்காழ் மாலை
மைஇரும் பித்தை பொலியச் சூட்டி
புத்தகன் கொண்ட புலிக்கண் வெப்பர்
ஒன்று இருமுறை இருந்து உண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தென
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்று இது
கொள்ளாய் என்ப கள்ளின் வாழ்த்தி
கரந்தை நீடிய அறிந்துமாறு செருவில்
பல்லான் இனநிரை தழூவிய வல்லோர்
கொடுஞ்சிறைக் குரூஉப்பருந்து ஆர்ப்ப
தடிந்துமாறு பெயர்த்தது இக்கருங்கைக் களிறே.

அ. பாடலின் பொருளை எளிய நடையில் எழுதுக.
ஆ. பாடலின் திணை துறைகளைத் தருக.
இ. பாடலைப்பாடிய புலவர் யார்?

2. மாணிக்கவாசகரின் பக்தி வெளிப்பாட்டு முறையை திருச்சாழல், செத்திலாப்பத்து, திருப்பள்ளியெழுச்சி ஆகிய பகுதிகளை அடிப்படையாக வைத்து விளக்குக.

3. கண்ணகி வழக்குரையில் அடைக்கலக்காதை முதல் வழக்குரைகாதை வரையிலான பகுதிகளில் கண்ணகியின் குணாம்சம் வெளிப்படுமாற்றை எடுத்துக்கூறுக.

4. தேம்பாவணியில் பிரிந்தமகவைக்காண் படலத்தினூடாக வெளிப்படும் உறவின் அந்நியோந்நியத்தைத் தெளிவுறுத்துக.

சய்நம்பு நாச்சியார் மான்மியம் நாட்டார் வழக்காறுகளைத் ன்னுள்ளே கொண்டுள்ளது எனக்கூறலாமா? விளக்குக.

6. மகாகவியின் ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் ஈழத்துக்கவிதை மரபில் ஏற்படுத்திய மாற்றத்தை மதிப்பிடுக.

7. பிச்சமூர்த்தி கவிதைகளின் அடிப்படைப் பண்புகளை எடுத்துக் கூறுக. அவர் ஏன் புதுக்கவிதையின் முன்னோடியாகக் கருதப்படுகிறார்? காரணம் கூறி விளக்குக.

***********